**தினசரி சந்தை நிலவரங்களால் வியக்கத்தக்க மாற்றம்    வெற்றிக் கதை:**



**திரு.டி.எம்.லோகநாதன்,**

**டி.எம்.ஜிகாய்கறிவியாபாரி,கடைஎண்.104**

**ஹட்,வி.வி.ஏ.பாதாளப்பள்ளி,**

**ஒசூர்–635109.**

**அலைபேசி: 9994625716.**

---

என் பெயர் லோகநாதன் நான் ஒசூர் சந்தையில் வாழைபழ கடை வைத்துள்ளேன். நான் 40 ஏக்கர் வைத்துள்ளேன். அதில் தக்காளி மற்றும் குடமிளகாய் பயிரிட்டு வருகிறேன். நான் எனது உற்பத்தி பொருட்களை உள்ளூர் சந்தையில் விற்பனை செய்கிறேன். ஆனால் நான் உற்பத்தி செலவுகளை கூட பெற முடிவதில்லை. அதனால் நான் எனது பொருட்களை சென்னை மற்றும் கோயமுத்தூர் சந்தைகளில் விற்க திட்டமிட்டேன். அப்பொழுது நான் தினசரி சந்தை நிலவரத்தை (DMI) பற்றி அறிந்தேன். கைபேசி சேவையில் எனது கைபேசி எண்ணையும் பதிவு செய்தேன்.

இந்த சேவையின் மூலமாக நான் சென்னை மற்றும் கோவை சந்தையின் தினசரி விலை நிலவரங்களை குறுந்தகவல்கள் மூலமாக அறியமுடிகிறது. மேலும் நான் www.indg இணைய தளம் மூலம் மொத்த வியாபாரங்களின் விபரங்களை தெரிந்து கொண்டு விற்பனை செய்ய முடிகிறது. மேலும் எனது வருமானம் மற்றும் விவசாய பணிகள் மேம்பட்டுள்ளது மேலும் பல பயன்களை நான் பெறுகிறேன்.

**கீழ்கண்ட சேவைகளை எதிர்வரும் காலங்களில் அளிக்குமானால் மிக்க பயன் தருபவையாக அமையும்:**

- காய்கறிகளுக்கு ஒப்பந்த விவசாயம்
- தனிநபர்களின் வங்கி கணக்கில் பணத்தை செலுத்துதல்
- வேறு மாநிலங்களின் சந்தைகளை இணைத்து சேவைகளை வழங்குமானால் எங்களின் சமூக உயர்விற்கு வழிவகுக்கும்

தினசரி சந்தை நிலவரம் மற்றும் துல்லிய வேளாண்மையை அறிமுகப்படுத்திய தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகளுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.